நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்

திரு. சா. வரதராஜன், பி.ஏ., பி.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.

**பிரிவு 313(1)(ஆ) CrPC -இன் படியான விசாரணை**

எதிரி: வீரராஜ்

| | | | |
|---|---|---|---|
| 1 | கேள்வி | : | அ.சா.1 – சுசிலா தேவி, அவருடைய புகாரில் 01.02.2022ம் தேதி காலை 11.00 மணிக்கு படந்தால் சந்திப்பில் உள்ள அய்யாவு டீக்கடை அருகில் வைத்து எதிரியாகிய நீங்கள் அ.சா.1 சுசிலா தேவியையும், அ.சா.2 ஜெயமீனாவையும் வழிமறித்து அரிவாளை காட்டி தாக்க முயற்சி செய்து கொலை மிரட்டல் விடுத்ததாகவும் சம்பவம் தொடர்பாக புகார் அளித்தாகவும் கூறியுள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 2 | கேள்வி | : | அ.சா.3-திரு.கிஷ்ணசாமி சிறப்பு சார்பு 01.02.2022ம் தேதி 14.00 மணியளவில் தலைமை காவலர் வெள்ளைதுரைப்பாண்டியன் நிலைய அலுவலில் இருந்த போது சாத்தூர் ஹவுசிங் போர்டைச் சேர்ந்த சுப்பையா மகள் சுசிலாதேவி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை(அ.சா.2) பெற்று புகார் மனுவின் தன்மைகேற்ப சாத்தூர் நகர் காவல்நிலைய குற்ற எண் 44/2022 பிரிவுகள் 294(பி), 341, 323, 506(2) இ.த.ச மற்றும் 4 of TNPHW Act -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை(அ.சா.ஆ.3) பதிவு செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 3 | கேள்வி | : | அ.சா.3-மேலும் அவருடைய சாட்சியத்தில், இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் பாண்டியன் 01.02.2022ம் தேதி 15.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்துகிருஷ்ணன், முத்தீஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர்(அ.சா.ஆ.4) மற்றும் வரைபடம் (அ.சா.ஆ.5) தயார் செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் |
| 4 | கேள்வி | : | அ.சா.3- மேலும் அவருடைய சாட்சியத்தில், உதவி ஆய்வாளர் பாண்டியன் சாட்சிகள் சுசிலாதேவி, ஜெயமீனாட்சி, விஜி, மாரீஸ்வரன் என்ற பரத் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |

| | | | |
|---|---|---|---|
| | பதில் | : | பொய் |
| 5 | கேள்வி | : | அ.சா.3– மேலும் அவருடைய சாட்சியத்தில், உதவி ஆய்வாளர் பாண்டியன் எதிரிகளை தேடிவந்த நிலையில் 01.02.2022ம் தேதி 18.00 மணிக்கு சாத்தூர் படந்தால் வடக்குத் தெருவில் எதிரி வீட்டருகிலிருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 8 செ.மீ நீளமுள்ள கைபிடியும் சுமார் 20 செ.மீ நீளமுள்ள பிளேடு பகுதியும் கொண்ட மொத்தம் 28 செ.மீ நீளமுள்ள கொடுக்கு அருவாள் ஒன்றை சாட்சிகள் ஜான்சி ராணி, சுப்பையா அகியோர் முன்னிலையில் அத்தாட்சியின்(அ.சா.ஆ.6) பேரில் கைப்பற்றியதகாவும், எதிரி மற்றும் சொத்துடன் 19.00 மணிக்கு காவல் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து நிலைய பாரா வசம் ஒப்படைத்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளதாகவும், சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் |
| 6 | கேள்வி | : | அ.சா.3– மேலும் அவருடைய சாட்சியத்தில், உதவி ஆய்வாளர் பாண்டியன் இவ்வழக்கினை பதிவு செய்த தலைமை காவலர் வெள்ளை துரைப்பாண்டியன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் தனது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் குற்ற சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரிகள் மீது பிரிவுகள் பிரிவுகள் 294(பி), 341, 323, 506(2) இ.த.ச மற்றும் 4 of TNPHW Act –ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | பொய் வழக்கு |
| 7 | கேள்வி | | வழக்கு பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 8 | கேள்வி | : | உங்கள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டா? |
| | பதில் | : | இல்லை |

கேள்விகள் என்னால் நேரடியாக எதிரியிடம் கேட்கப்பட்டு, அவர்கள் கூறிய பதில் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர், எண்.2, சாத்தூர்